## உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை நல உதவிகளை வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 27-

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று (26.5.2026-செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக விவசாய அணித் துணைத் தலைவர்கள் விவசாய அணி இரா.தமிழ்மணி தலைமையில் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராமலிங்கம், பா.செந்தமிழ்ச்செல்வன், குறிஞ்சி என். சிவகுமார் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதி சேஷன், மதுரை ஆர்.கணேசன், டேம் வெங்கடேசன், நல்லசேதுபதி, டி.எம்.அரியப்பன், சூடப்பட்டி சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரையாற்றியதோடு, இன்றைய அரசியல் சூழல் குறித்து விரிவுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும் - இந்திய அரசியலின் மூத்த தலைவராகவும் - கலை, இலக்கியம், பத்திரிக்கை என அனைத்து துறைகளையும் தன் வசப்படுத்தி வரலாற்று சாதனை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை விழாவினை தி.மு.க. விவசாய அணியின் சார்பாக மாநிலம் முழுவதும் உள்ள விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, கழகக் கொடியேற்றி ஏழையெளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மிகச் சிறப்பாக நடத்திட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### வாக்களித்த மக்களுக்கு நன்றி!

நடந்துமுடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

### கழகத் தலைவருக்கு நன்றி!

நடைபெற்று முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை' உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

### எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராட்டு - நன்றி!

2026 தேர்தல் களத்தில் ஓய்வின்றி தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து 73 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற பாடுபட்ட கழக இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

### பயிர் கடனை தள்ளுபடி செய்க!

த.வெ.க. தலைவர் விஜய் தனது தேர்தல் அறிக்கையில் 5 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு முழு கடன் தள்ளுபடியும் - 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு கடனில் 50 சதவிதம் தள்ளுபடியும் செய்யப்படும் என்று உறுதி அளித்து விட்டு, இப்பொழுது 5000 ரூபாய்தான் தள்ளுபடி என்கிற மோசடியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. தேர்தல் அறிக்கையில் கூறியபடி விவசாயிகளுக்கான பயிர் கடன் தள்ளுபடி செய்திட இந்த கூட்டம் தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

### மேகதாது அணை பிரச்சினைக்குத் தீர்வு!

மேகதாது அணை தொடர்பான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு தடை விதிக்க மறுத்த போது, அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான கழக அரசு உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தது. அம்மனுமீது தற்போது மேகதாது அணைக்கு திட்ட அறிக்கை தயாரிக்க தடை விதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

### கோரிக்கையினை நிறைவேற்றுவீர்!

ஆளும் த.வெ.க. அரசு காங்கிரஸ் கட்சியின் தயவோடுதான் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். காங்கிரஸ் கட்சியின் தயவில் ஆட்சி செய்வதால், தமிழர்களின் உரிமையை விட்டுக் கொடுக்கப் போகிறதா த.வெ.க. அரசு..? என்ற கேள்வி காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அந்த அச்சத்தை போக்கி, காவிரி டெல்டா மக்களின் உயிர்வாழ்வாதார பிரச்சினையான மேகதாது அணை பிரச்சினையில் ஆளும் த.வெ.க. அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் மாநில அரசை கேட்டுக் கொள்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வேளாண் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ரசாயன உரங்களின் கடுமையான விலை உயர்வு மேலும் ஒரு பேரிடியாகும். எனவே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த உரவிலை உயர்வை தி.மு.க. விவசாய அணி வன்மையாக கண்டிப்பதோடு, உடனடியாக உயர்த்தப்பட்ட ரசாயன உரங்களின் விலையை ரத்து செய்திட வேண்டுமென ஒன்றிய பாஜக அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

பொள்ளாச்சி பரம்பிகுளம் ஆழியார் திட்டத்தில் பி.ஏ.பி.வாய்க்காலை தூர்வார 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கழகத் தலைவர் அவர்களம் 10 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்து கடைமடை பகுதி வரை தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. அதன்படியே, தற்போது பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் அமைச்சரை விவசாயிகள் நேரில் சந்தித்து இந்த ஆண்டும் தூர்வார 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென கோரிக்கை வைத்தும் இது நாள் வரை நிதிஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, பிஏபி கால்வாய் தூர்வாரும் பணிக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென இக்கூட்டம் மாநில அரசை வலியுறுத்துகிறது.

பிஏபி திட்டத்தில் இன்னும் நிறைவேற்றப்படால் உள்ள ஆனைமலையாறுநல்லாறு அணை திட்டங்களை கேரள அரசுடன் பேச்சுவார்த்தை உடனடியாக நடத்தி நிறைவேற்ற வேண்டும் என்றும், பிஏபி திட்ட கால்வாய்கள் முழுமையாக புதுப்பிக்கும் பணிகள் ற்கொள்ள 4500 கோடி ரூபாயில் திட்ட அறிக்கை தயார் செய்து அரசின் பரிசீலனையில் உள்ளது. போர்க்கால அடிப்படையில் நிதிஒதுக்கிடு செய்து, தற்போது பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு நடவடிக்கை எடுத்திட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

### மேட்டூர் அணை திறப்பு!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்வதற்கு, 2021ஆம் ஆண்டு பதவியேற்ற நாள் முதல் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் , ஒவ்வொரு ஆண்டும் ஜூன்12ஆம் நாள் மேட்டூர் அணையினை திறந்து, கடைமடை பகுதி வரை காவிரி நீர் அடைந்து, டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தியதைப் போலவே, தற்போது புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க.அரசு, இந்த ஆண்டும் ஜூன்12 அன்று மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் கிழக்கு ஒன்றியம், தாதம்பாளையம், தையல்நாயகி கோவிந்தன் அவர்களின் வீடு எரிந்து சேதமானதை அறிந்து நேரில் சென்று பார்வையிட்டு, ஆறுதல் கூறி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கோலியனூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பா. தெய்வசிகாமணி, கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏ.சச்சிதானந்தம், விழுப்புரம் வட்டாட்சியர் யுவராஜ், வருவாய் ஆய்வாளர் உமா மகேஸ்வரி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கள ஆய்வு கூட்டம் மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் அறிவிப்பின்படி கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

இத் தொகுதிகளில் **இரா.கிரிராஜன் எம்.பி., ப.அப்துல் மாலிக்** ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

1. 29.05.2026 - வெள்ளிக்கிழமை - காலை 10 மணி - பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி - கௌரி திருமண மண்டபம் - பண்ருட்டி.2. 30.05.2026 - சனிக்கிழமை, காலை 10 மணி - விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி - சிவபூஜா திருமண மண்டபம் - விருத்தாசலம். 3. 31.05.2026 - காலை 10 மணி - நெய்வேலி சட்டமன்றத் தொகுதி - தொ.மு.ச. அலுவலகம் - நெய்வேலி.4. 10.06.2026 - காலை 10 மணி - திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி - GV மஹால் - மங்களூர்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :26.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில, மாவட்ட அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 31-05-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது (காசிமுத்து மாணிக்கம்) தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், நா.முருகவேல், பி.டி.பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர். எஸ்.உமரிசங்கர், வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துசாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கே.வி.எஸ்.சீனிவாசன், பி.டி.அன்பரசன், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா
கழக ஆக்கப் பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.05.2026

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றியம் தீவனூரில் நடைபெற்ற மயிலம் சட்டமன்ற தொகுதி திமுக நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் உள்ளிட்ட ஒன்றிய கழகச் செயலாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மணியன்

### மே 27 (2009)



கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலைஞர் விருது' வழங்கிசிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க.

# மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம்!

## எ.நாகராஜன் அறிவிப்பு !

சென்னை, மே 27-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், வருகின்ற 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனை கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்களும் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றயுள்ளார்கள்.


எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு மாநகராட்சி ஆளும் கட்சி கொறடா எ. நாகராஜன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இராயபுரம் சி. நவமணி

### மே 27 (2012)



இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**